# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8069016

1. District : மாவட்டம் : திருச்சி | PS: காவல்நிலையம் : ஊ.த.க பிரிவு | Year: ஆண்டு : 2023 | FIR No.: மு.த.அ. எண் : 09 | Date: நாள் : 11-07-23

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் -1988 (திருத்தம் - 2018) | Sections பிரிவுகள்: 7(A)

   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் : 09.07.23 | Date to : நாள் வரை : 20-30 Hrs

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 11.07.23 | Time : நேரம் : 07.00 Hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : எழுத்து மூலமான புகார் (Computerised)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : திருச்சி, தாஜ் கல்யாண மண்டபம் எதிரில் உள்ள டீ ஸ்டால் 9 km வடக்கு

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த காவல் நிலைய பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : அகிதா | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : சரத்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 08-05-86 | (d) Nationality : நாட்டினம் : இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் : ஸ்பா சென்டர் உரிமையாளர் | (g) Address : முகவரி : 6-A, சிந்தாமணி, கரூர் பைபாஸ் ரோடு, திருச்சி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திருமதி. ரமா, உதவி ஆய்வாளர், விபச்சார தடுப்பு பிரிவு, திருச்சி மாநகரம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   வாதியால் தாமதம்.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-2T.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில்
இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 11·07·2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 11/7/23

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 11·07·23

Name: பெயர் K·Balamurugan
Rank: நிலை Inspector No. எண் ..........
V&AC, Trichy.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.09/2023-இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 11.07.2023 பணியில் இருந்த போது காலை 07.00 மணியளவில் திருச்சி, கரூர் பைபாஸ் ரோடு, சிந்தாமணி, 6-A என்ற முகவரியில் வசித்து வரும் ஆரணாஸ் கேரளா ஆயுர்வேதிக் ஸ்பா சென்டரின் உரிமையாளர் அஜிதா க/பெ.சரத் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாநகரம், விபச்சார தடுப்புப் பிரிவில் உதவி ஆய்வாளர் திருமதி.ரமா மற்றும் புகார்தாரர் திருமதி.அஜிதா ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 11.07.2023 காலை 07.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.9/2023 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் அஜிதா, க/பெ. சரத், உரிமையாளர், ஆரணாஸ் கேரளா ஆயுர்வேதிக் ஸ்பா சென்டர், 6–A, சிந்தாமணி, கரூர் பைபாஸ் ரோடு, திருச்சி. பெறுநர் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்பு அலுவலகம், திருச்சி. அய்யா, நான், சென்ற 2019ம் ஆண்டு முதல் மேற்கண்ட முகவரியில் ஆரணாஸ் கேரளா ஆயுர்வேதிக் ஸ்பா சென்டரை உரிமம் பெற்று சட்டப்படி நடத்தி வருகிறேன். அதேபோல், கலைஞர் அறிவாலயத்திற்கு பின்புறம் அரசு டவர்ஸ் என்ற கட்டிடத்தில் விருந்தா என்ற ஒரு ஸ்பா சென்டரையும் நடத்தி வந்தேன். ஆனால், கடந்த ஒரு வருடமாக அதனை நான் நடத்தாமல் வைத்திருந்தேன். எனது சொந்த ஊர் கேரளா மாநிலம், கோட்டையம் ஆகும். எனக்கு திருமணமாகி இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளார்கள். என் குழந்தைகள் கேரளாவில் உள்ள எனது தாயாரிடம் இருந்து வருகிறார்கள். எனது ஸ்பா சென்டர்களுக்கு, திருச்சியைச் சேர்ந்த எனது அண்ணனின் நண்பர் ராகுல் என்பவர் எனக்கு உதவியாக இருந்து வந்தார். கடந்த 4 ஆண்டுகளில் திருச்சியில் உள்ள எனது ஸ்பா சென்டர்மீது போலீஸ் கேஸ் எதுவும் கிடையாது. இந்நிலையில், நான் கடந்த 6.4.23ம் தேதி 12 மணியளவில் விருந்தா ஸ்பா சென்டரை மீண்டும் திறக்கலாம் என்பதற்காக ஏ/சி ரிப்பேர் செய்து கொண்டிருந்தேன். அப்போது, என்னுடைய ஆரணாஸ் கேரளா ஆயுர்வேதிக் ஸ்பா சென்டரை திருச்சி, விபசார தடுப்பு போலீசார் வந்து சோதனை செய்துவிட்டு, விருந்தாவிலிருந்த என்னை அழைத்துச் சென்று என் மீதும் அந்த இடத்தில் இல்லாத ராகுல் மீதும் கோட்டை காவல் நிலைய குற்ற எண்.486/2023-ன்படி பொய்யாக கேஸ் போட்டு, என்னை மட்டும் கைது செய்து திருச்சி மகளிர் சிறையில் அடைத்துவிட்டனர். பின் கடந்த ஏப்ரல் 20-ந்தேதி நான் பெயிலில் வந்து கேரளா சென்றுவிட்டேன். அதற்குபிறகு, கடந்த 5.7.23ம் தேதி எனது அம்மாவின் தொலைபேசியில் S.I ரமா திருச்சியிலிருந்து பேசுவதாக கூறி என் மீது உள்ள வழக்கு தொடர்பாக அவரை வந்து நேரில் சந்திக்கும்படி

கூறினார். நான் கடந்த 8.7.23 அன்று காலை திருச்சிக்கு வந்தேன். பின்னர் கடந்த 9.7.23 அன்று மாலை சுமார் 4 மணியளவில் எனது போனிலிருந்து S.I ரமாவை தொடர்பு கொண்டு பேசியபோது, அவர் என்னிடம் இரவு 8.30 மணிக்கு சத்திரம் பஸ் ஸ்டாண்டு அருகே உள்ள தாஜ் கல்யாண மண்டபத்தின் எதிரே உள்ள பஸ்-ஸ்டாப் வந்து நிற்கும்படி சொன்னார். நான் இரவு நேரம் என்பதால் ராகுலை அழைத்து கொண்டு இரவு 8.30 மணிக்கு அங்கு சென்று காத்திருந்தேன். அப்போது அங்கு வந்த S.I ரமா மேடம் என்னையும் ராகுலையும் சந்தித்து என்னம்மா நீ பாட்டுக்கு கேரளாவிற்கு போயிட்ட என்னை வந்து பாக்க மாட்டீயா என்று கூறினார். அதற்கு நான் அவரிடம் குழந்தைகள் எல்லாம் கேரளாவில் இருக்காங்க மேடம், பொழைப்புக்காக தான் திருச்சியில் இருந்தேன் என்று கூறினேன். உடனே ஷி.மி ரமா, ராகுலை பார்த்து நீ பெயில வாங்கிட்டியாப்பா என கேட்டார். அதற்கு ராகுல் பெயில் வாங்கிட்டேம்மா என்று சொன்னார். பின்னர் S.I ரமா அவர்கள் என்னிடம் இது பார்மாலிட்டிக்கு போட்ட கேஸ்தான், ஒன்னும் பிரச்சனை இல்ல, உன் கேசுக்கு சார்ஜசீட் போட்டுட்டேன், கோர்ட்டில் உன் கேஸ் விசாரணைக்கு வரும் போது உனக்கு சாதகமா சாட்சிகளை சரிசெய்யனும், அப்பதான் உன் மீது உள்ள கேஸ் தள்ளுபடியாகி நீ விடுதலை ஆகலாம், நீயும் உன் கடையை பழையபடி நடத்தமுடியும்னு சொன்னாங்க. மேலும், குண்டாஸ் கேசும் போடாமல் இருக்கும்படி பாத்துக்கிறேன் என்று சொல்லிவிட்டு, சிரிச்சிக்கிட்டே உன்னோட வேலைக்காக பத்தாயிரம் ரூபாய் கொடுத்திடுங்க உங்க கேசை சீக்கிரமா முடிச்சு கடையை நடத்த ஹெல்ப் பண்ணுரேன் என்று சொன்னாங்க, அதற்கு நான் இப்ப அவ்வளவு பணம் தரமுடியாது மேடம் என்று சொன்னேன். அதுக்கு S.I ரமா மேடம், அப்படின்னா அட்வான்ஸா ரெண்டு நாள்ல மூவாயிரம் ரூபாய ரெடி பண்ணிட்டு என்னை போன்ல கூப்பிடு, நான் சொல்லுர இடத்திற்கு கொண்டு வந்து கொடுத்திடுங்க, நீங்க பணம் கொடுத்தாதானே நான் ஏதாவது உங்களுக்கு ஹெல்ப் பண்ண முடியும் என்று சொன்னாங்க. அப்போது ராகுல் அவங்களிடம் அஜிதாவே ரொம்ப கஷ்டபட்டுதான் கடையை நடத்திட்டு வராங்க மேடம், நீங்க பார்த்து ஹெல்ப் பண்ணுங்க மேடம் என்று சொன்னார். பின்னர் நான், S.I ரமாவிடம் சரிங்க மேடம் பணத்தை எப்படியாவது ரெடி பண்ணிட்டு உங்கள வந்து பாக்குரேன் என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். எனக்கு லஞ்சம் கொடுக்க சம்மதமில்லை. என்னிடம் லஞ்சம் கேட்ட திருச்சி சிட்டி விபச்சார தடுப்பு பிரிவு S.I ரமா அவர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கிறேன். எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியததால் ராகுல் மூலம் இந்த மனுவை தயார் செய்துள்ளேன். இப்படிக்கு, Sd.xxx (அஜிதா) 11.07.2023 Submitted to the Court of Hon'ble Special Judge, Special court for the Prevention of Corruption Act-1988, Trichy. Received this report at 07.00 hrs on 11.07.2023 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.09/2023 u/s 7(a) of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 08.00 hrs on 11.07.2023. Sd.xxx (K.Balamurugan) 11/7/23 Inspector of Police, V&AC, Trichy.

11/7/23
Inspector of Police,
V&AC, Trichy